Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 47

வியாழக்கிழமை 12 ஜனவரி 2023

மார்கழி 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு சட்டத் தடைகள் இல்லை!



## தேர்தல் நடவடிக்கைகள் முழுவேகத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, ஜனவரி 12**

**உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியாக எந்தத் தடையும் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தொடரும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.**

»09

## கிளிநொச்சி, வவுனியாவில் தமிழரசுக் கட்சி கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், ஜன.12
உள்ளூராட்சித் தேர்தலுக்கான கட்டுப்பணம் இலங்கைத் தமிழரசுக் கட்சியால் கிளிநொச்சி, வவுனியாவில் நேற்றுச் செலுத்தப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்குமான கட்டுப்பணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி செலுத்தியது.

»11

## தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தலுக்காக உதயமானது புதிய கூட்டணி!

### 12 கட்சிகள் கைகோர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.12
உள்ளாட்சி மன்றத் தேர்தலை இலக்கு வைத்து 12 அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் 'சுதந்திர மக்கள் கூட்டணி' எனும் பெயரில் புதிய தொரு அரசியல் கூட்டணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டணியின் சின்னமாக 'ஹெலிகொப்டர்' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. புதிய கூட்டணியின் ஆரம்ப நிகழ்வு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

»11

## ஜனநாயகப் போராளிகளும் புதிய கூட்டணியில் இணைவு

யாழ்ப்பாணம், ஜன.12
உள்ளூராட்சித் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ள புதிய கூட்டணியில் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் இணைந்துள்ளது.

»11

## அரசியல் திருவிழாக்களுக்காக கைதிகளை தோரணமாக்காதீர்!

### அருட்தந்தை சக்திவேல் காட்டம்

யாழ்ப்பாணம், ஜன.12
அரசியல்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்ட பின்னரே அரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். அரச தரப்பினருடனான பேச்சின் பின்னர் கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பழைய பல்லவியையே கூறுகின்றார். அரசியல் திருவிழாக்களுக்காக

»11

## பித்தளையில் தாலிக்கொடி; ஏமாற்றிய "பலே கில்லாடி"

### 7 ஆண்டுகளின் பின்னர் காங்கேசன்துறையில் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜன.12
தங்கம் என்று தெரிவித்து பித்தளையில் தாலிக்கொடி செய்து கொடுத்த குற்றச்சாட்டில் ஒருவர் 7 ஆண்டுகளின் பின்னர் காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

»10

## இலங்கைப் பொருளாதாரம் இவ்வாண்டும் வீழ்ச்சியுறும்

### உலக வங்கி அபாய எச்சரிக்கை

கொழும்பு, ஜன.12
இலங்கையின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டு மீண்டும் வீழ்ச்சியடையும் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது. 2023ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் தொடர்பான அறிக்கையிலேயே உலக

»10

## மனைவிக்கு வாள்வெட்டு; தலைமறைவான கணவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.12
தனது மனைவியை வாளால் வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த ஒருவர் நேற்றுக் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
இருபாலை, மடத்தடியில் கடந்த வாரம் இந்தச் சம்பவம் நடந்திருந்தது. மனைவியை வாளால் வெட்டிக் காயப்படுத்திய கணவர் தலைமறைவாகியிருந்த நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

»09

## களனி திஸ்ஸ மின் உற்பத்தி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன.12
களனி திஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை இன்று நள்ளிரவு முதல் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மின் பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

»10

## போதை மாத்திரைகளுடன் ஆணும் பெண்ணும் கைது!

யாழ்ப்பாணம், ஜன.12
போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவனில் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்களிடம் இருந்து 400 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும், 18 வயதுடைய ஆணும், 25 வயதுடைய பெண்ணுமே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

»10

## விபத்தில் சிக்கிய முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன.12
விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த ராமன் தர்மலிங்கம் (வயது - 81) என்பவரே உயிரிழந்தவராவார்.

»04



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இவ்வருடம் இருமடங்காகின தைப்பொங்கல் செலவுகள்

## கிராமப்புறங்களில் வியாபாரம் சோபையிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகாரணமாகஏற்பட்ட விலைவாசி உயர்வால் பொங்கல் பொருள்களின் விலைகள் கடந்த வருடத்தை விடவும் இந்த வருடம் இரு மடங்கை விட அதிகமாக உயர்ந்துள்ளன.



தமிழர் திருநாளான தைப்பொங்கல் பண்டிகையை வரவேற்பதற்கு அனைவரும் தயாராகி வருகின்றனர். வர்த்தக நிலையங்களில் தைப்பொங்கல் பொதிகளா கவே பொருள்கள் பொதிசெய்யப்பட்டும் விற்பனை செய்யப்படுகின்றன. அதேவேளை, பொருளாதார ரீதியில் நலிந்த மக்களுக்கு தைப்பொங்கல் பொதி களை பல்வேறு தரப்பினரும் இலவசமாக வழங்கும் செயற்பாடும் நடைபெறுகின்றது.

பொருளாதார நெருக்கடி அதன் விளைவால் ஏற்பட்ட பொருள் தட்டுப்பாடு என்பன காரணமாக பொருள்க ளின் விலைகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்கை விட அதிகரித்துள்ளன. பொங்கல் பானை, அகப்பை உள்ளிட்ட பொருள்களின் விலை களும் சந்தைகளில் அதிகரித்தே காணப்படுகின்றன. பானை வைக்கும் சாதாரண திருகணி 30 ரூபாவா லிலிருந்து 60 ரூபா வரையில் உயர்ந்துள்ளது.

அதேபோன்று பானைகள் பல்வேறு வடிவங்களில் வந்துள்ளன. மண் பானைகள் இம்முறை அதிகள வில் சந்தைக்கு வரவில்லை. ஆனாலும், சந்தையில் விற்னை செய்யப்படும் அலுமினிய பானைகள் இரண்டு மடங்கு அதிகரித்த விலையிலேயே விற்ப னையாகின்றன.

நகர்ப்பகுதிகளுக்கு வருகைதரும் மக்கள் பூசைப் பொருள்களை மாத்திரம் குறிப்பிட்டளவில் கொள்வ னவு செய்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

கிராமப்புறங்களில் பொங்கல் வியாபாரம் களையி ழந்துள்ளன என வியாபாரிகளால் தெரிவிக்கப்படு கிறது. (ச-125,17)

| பொருள்கள் (கிலோ) | 2022 | 2023 |
|---|---|---|
| தீட்டல் பச்சை அரிசி | 90 | 220 |
| வறுத்த பயறு | 800 | 1600 |
| சக்கரை | 360 | 320 |
| ஏலக்காய் | 4000 | 9000 |
| பிளம்ஸ் | 900 | 1350 |
| கச்சான் | 700 | 1600 |
| கஜு | 2500 | 4500 |
| நெய் (காற்போத்தல்) | 250 | 550 |
| பொங்கல் பானை | 1100 | 1700 |
| அகப்பை | 30 | 60 |
| பட்டாசு - பூறிஸ் | 150 | 350 |
| சீன வெடிப் பெட்டி | 120 | 250 |

# ரயில் பணியாளர் வெற்றிடம் இந்தமாத இறுதிக்குள் தீர்வு

கொழும்பு, ஜன. 12

ரயில் பயணங்கள் இரத்துச் செய்யப் படுவதை தவிர்ப்பதற்கு இந்த மாத இறுதிக்குள் நிகழ்ச்சித் திட்டம் வகுக் கப்படும். மேலும் நீண்டதூர ரயில் சேவைகளுக்கான ரிக்கெற்றுக்களை ஒன்லைன் முறையில் பதிவு செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என போக்குவரத்து, நெடுஞ்சாலை கள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அண்மையில் கூடிய போதே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது:-

புகையிரத சேவை பணியாளர்கள் அதி களவில் ஓய்வுபெற்றமையால் ஏற்பட்ட வெற்றிடத்தால் சில ரயில் சேவைகள் முடங்கின. குறுந்தூர ரயில் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டன. ஊடகங்கள்



அறிக்கையிடுவதைப் போன்று ரயில் போக்குவரத்து பெருமளவில் முடங்க வில்லை.

ரயில் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு இம்மாத இறுதிக் குள் நியமனங்கள் இடம்பெறவுள்ளன. புதிய ரயில் நேர அட்டவணை பெப்ரவரி மாத ஆரம்பத்தில் வெளியிடப்படும். அத்துடன் நீண்டதூர ரயில் சேவைக் கான ரிக்கெற்றுக்களை 100 வீதம் ஒன்லைன் முறையில் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)



# ஹிந்தி மொழி தின நிகழ்வுகள் யாழில்

யாழ்ப்பாணம், ஜன. 12

உலக ஹிந்தி மொழி தின நிகழ்வுகள் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட் ராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஹிந்தி மொழிக் கற்கைநெறியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-66)

## சந்நிதி ஆற்றில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆற்றில் முதியவர் ஒருவரின் சட லம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மீட் கப்பட்டது என பொலி ஸார் தெரிவித்தனர்.

அல்வாய் கிழக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் வேலுப் பிள்ளை நவரட்ணம் (வயது-84) என்பவரே சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

இறப்புக்கான கார ணம் இதுவரை தெரிய வில்லை எனவும் மேல திக விசாரணைகள் நடத்தப்படுகின்றன என வும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்த னர். திடீர் இறப்பு விசா ரணைகளை வல்வெட் டித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவராசா மேற்கொண் டார். (ச-26)

## மஹாநாம, திஸாநாயக்கவுக்கு சிறைத்தண்டனை உறுதியானது

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் பணிக்குழாமின் முன்னாள் பிரதானி ஐ.எச்.கே.மஹாநாம மற்றும் அரச மர கூட் டுத்தாபனத்தின் முன் னாள் தலைவர் பி.திஸா நாயக்க ஆகியோரின் சிறைத் தண்டனையை உறுதிசெய்து உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள் ளது.

20 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற குற் றச்சாட்டில் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய் யப்பட்ட வழக்கில் அவர் கள் இருவரும் குற்றவா ளிகள் என அடையா ளம் காணப்பட்டு அவர்க ளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் சிறைத் தண்டனை வழங்கியது. இதன்படி, ஐ.எச். கே.மஹாநாமவுக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 65 ஆயி ரம் ரூபா அபராதமும் பியதாஸ திஸாநாயக்க வுக்கு 12 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 55 ஆயிரம் ரூபா அப ராதமும் விதிக்கப்பட்டது. இவர்கள் இந்தத் தீர்ப் புக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் மேன் முறையீடு செய்த நிலை யிலேயே அவர்களின் சிறைத் தண்டனை உறுதிசெய்யப்பட்டுள் ளது." (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கே முனைப்பு

*ஆணைக்குழுவின் நிலைப்பாடு இது கொழும்பு வட்டாரங்களில் தகவல்!*

கொழும்பு, ஜன. 12

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இருக்கின்றனர். எனவே, நீதிமன்ற உத்தரவைத்தவிர வேறு வழிகளில் எமது முடிவை எவராலும் மாற்ற முடியாது - இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் அறிவித்தார் என அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும், அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

இதன்போது வேட்புமனு கோரலில் ஏற்பட்ட இழுபறி உட்பட உள்ளாட்சிமன்ற தேர்தல் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

வேட்புமனு தொடர்பில் துறைசார் அமைச்சரின் செயலாளரால் வெளியிடப்பட்ட அறிவிப்பு மீளப்பெறப்பட்டுள்ளது, அதனால் பிரச்சினை எதுவும் இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துகள் இருந்திருந்தாலும், தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளோம் எனவும் தவிசாளர் கூறியுள்ளார். நீதிமன்ற உத்தரவை தவிர, வேறு விதத்தில் தேர்தலை பிற்போட முடியாது. திட்டமிட்ட அடிப்படையில் அது நடத்தப்படும் எனவும் ஆணைக்குழுவின் தவிசாளர் கூறினார் என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய குறிப்பிட்டார். (ம-44)

# தமிழரின் ஒற்றுமைக்கு தமிழரசுவால் குந்தகம்!

## வினோ எம்.பி. குற்றச்சாட்டு



மன்னார், ஜன. 12

தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவால், இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்துள்ளது. தமிழ் மக்களுடைய கடந்த கால போராட்டம், இழப்புக்கள், தியாகங்கள், அனைத்தையும் இவர்கள் செய்த இந்தச் செயல் மூலமாகக் கொச்சைப்படுத்தியுள்ளார்கள் – இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரான வினோநோகராதலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழரசுக் கட்சியினர் உண்மையான அக்கறையோடு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இல்லை என்பதை அவர்களுடைய இந்த முடிவு உணர்த்துகிறது. அது தேர்தலாக இருந்தாலும் சரி, ஜனாதிபதியுடனான சந்திப்பாக இருந்தாலும் சரி அனைவரும் இணைந்தே செயற்பட வேண்டும். இதைத்தான் தமிழ் மக்கள் விரும்புகின்றனர். இவ்வாறான நிலையில், அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். இவ்வாறிருக்கையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிச் சென்றுள்ளது. தமிழ் மக்களின் கருத்துகளை தமிழரசுக் கட்சியினர் மதிக்கவில்லை. இது, அற்ப தேர்தல் கதிரைகளுக்காக தமிழர்களுக்குத் துரோகம் விளைவிக்கும் செயற்பாடாகும் - என்றார். (ம-213)

*மன்னாரில்*

## இலங்கைத் தமிழரசுக் கட்சி கட்டுப்பணம் செலுத்தியது!

மன்னார், ஜன. 12

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக மன்னார் மாவட்டத்தில் நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சி கட்டுப்பணம் செலுத்தியது. தமிழரசுக் கட்சியின் சார்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

மன்னாரில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணமே இவ்வாறு செலுத்தப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று அங்கத்துவக் கட்சிகளும் இணைந்து மாவட்டத்தில் நான்கு



உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றும் என்று கட்டுப்பணம் செலுத்தியதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரி வித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-213)

*வடக்கு - கிழக்கில்*

## அங்கஜன் தலைமையில் கை சின்னத்தில் சு.க.!

யாழ்ப்பாணம், ஜன. 12

வடக்கு கிழக்கில் அங்கஜன் தலைமையில் சுதந்திரக் கட்சி 'கை' சின்னத்தில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனு தாக்கல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் சகல கட்சிகளும் வேட்பாளர்களை தெரிவு செய்வதில் மும்முரம்காட்டி வருகின்றன.

அந்த வகையில் சுதந்திரக் கட்சியின் பிரதிச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் வடக்கு - கிழக்கில் சுதந்திரக் கட்சி கை சின்னத்தில் தனித்து போட்டியிடவுள்ளது. (ம-20)

## ஐக்கிய சோஷலிஸக் கட்சி யாழ்ப்பாணத்தில் போட்டி!

உள்ளூராட்சி தேர்தலில் யாழ். மாவட்டத்தில் களமிறங்குவதற்கு ஐக்கிய சோஷலிஸக் கட்சி திட்டமிட்டுள்ளது என்று அதன் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய 'உதயனிடம்' தெரிவித்தார்.

'யாழ். மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள சில சபைகளுக்கு எமது கட்சி போட்டியிடும். மக்களும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்' எனவும் சிறிதுங்க ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார். ஆட்டோ சின்னத்திலேயே ஐக்கிய சோஷலிஸக் கட்சி களமிறங்கவுள்ளது. (ம-44)

## மடிச்சுக்கட்டி தாக்கம் மறைய களை நெல் தாக்கம் பரவல்!

*கிளிநொச்சி விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்து*

கிளிநொச்சி, ஜன. 12

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையில் இலை மடிச்சுக்கட்டி தாக்கம் கட்டுக்குள் கொண்டுவரப்படும் நிலையில் களை நெல்தாக்கம் தற்போது ஆங்காங்கே பரவி வருகின்றது என கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையாளர்களுக்கு சவாலாக காணப்பட்ட இலை மடிச்சுக்கட்டி தாக்கம் கட்டுக்குள் கொண்டுவரப்படுகிறது.

இந்தநிலையில் களை நெல் தாக்கம் தலைதூக்கியுள்ளது.

உரியவாறு தூற்றாத நெல்லை விதைத்தல், வயல் நில உழுதல் முறைகள் போன்றவற்றில் ஏற்படும் குறைபாடுகள் காரணமாக இதன் தாக்கம் ஏற்படுகின்றது.

இதனை விவசாயிகள் முழுமையாக பிடுங்க வேண்டும். அத்துடன் எதிர்வரும் காலங்களில் விதைப்புக்கு முன் நிலத்தை உழுகின்ற போது முதல்முறை உழுத பின்களை நாற்றுக்கள் தென்படின் மீளவும் உழுதல் வேண்டும்.

மேலும் முறையான வகையில் தூற்றிய நெல்லை விதைப்பதன் மூலம் இதன் தாக்கத்தை தவிர்க்கலாம். குறித்த களையை கட்டுப்படுத்த தவறினால் நெல் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (சு-125)

*பனியுடனான காலநிலையால்*

# நெற்பயிரை பீடிக்கும் நோய்த் தாக்கங்கள்!

*விவசாயிகள் அவதானம்*

மன்னார் மாவட்டத்தின் மொத்த நெற்பயிர்ச் செய்கையில் 15 சதவீதமானவை பனிப்பூச்சி, சிற்றுன்னி மற்றும் எரிபந்தம் ஆகிய நோய்களின் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளன.

இதனை அவதானிக்கும் விவசாயிகள் உடனடியாக அந்தந்த பிரதேச போதனாசிரியர்களிடம் தெரியப்படுத்தி கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் க.மதனராஜ்குலாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நிலவுகின்ற பனியுடன் கூடிய காலநிலை இந்த நோய்த் தாக்கங்களை ஊக்குவிக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் 22 ஆயிரத்து 311 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில் 15 சதவீதமானவை பனிப்பூச்சி, சிற்றுன்னி மற்றும் எரிபந்தம் ஆகிய நோய்களின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் தாக்கம் ஏற்பட்டுள்ள வயல் நிலப்பரப்புகளை அவதானிக்கின்றபோது இடையிடையே பச்சையத்தன்மை குறைந்து இலைகள் வெளிறிய மஞ்சள் நிறத்தன்மையுடன் காணப்படும்.

இவ்வாறு நெற்பயிரின் நிறங்கள் வெளிறும் தன்மை காணப்படின் விவசாயிகள் உடனடியாக அந்தந்த பிரதேச விவசாய போதனாசிரியர்களை தொடர்புகொண்டு கட்டுப்படுத்த வேண்டும். இதனைக் கட்டுப்படுத்தாத தருணத்தில் பயிரில் பச்சையத்தன்மை குறைவடைந்து பயிரினுடைய உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைவடையும்- என்றார். (சு-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2023



மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர். கிரகங்களில் மெல்ல நகர்பவர். நீதிமானாகச் செயற்பட்டு அவரவரின் முன்வினைகளுக்கு ஏற்ப உரிய பலாபலன்களைக் கொடுத்து, மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர்.

'ஏழரைச் சனி' என்றதும் பயம் கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர்; இன்பதுன்பங்களை வினைப்படி செயற்படுத்தி வாழவைப்பவர்.

**நிகழும் சுபகிருது வருடம் தை மாதம் 3ஆம் நாள் (17.01.2023) செவ்வாய்க் கிழமை அன்று (திருக்கணிதப் பஞ்சாங்கப்படி), தன் சொந்த வீடான மகர ராசியிலிருந்து மற்றொரு சொந்தவீடான கும்பத்துக்கு பெயர்ச்சி ஆகிறார் சனிபகவான்.** இதனால் தனுசு ராசிக்கு ஏழரைச் சனி காலகட்டம் நிறைவடைகிறது. மீன ராசிக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. மகர ராசியினருக்கு ஜன்மச்சனி விலகுகிறது.

| ராசி | சனி தேவரின் நாமம் | சனிபகவான் தாக்கங்கள் | நன்மை | தீமை |
|---|---|---|---|---|
| மேடம் | லாப சனி | மிகவும் நன்மை | 90% | 10% |
| இடபம் | கர்மசனி | பாதிப்பு குறைவு | 70% | 30% |
| மிதுனம் | பாக்கியசனி | அஷ்டம சனி முடிவு | 75% | 25% |
| கடகம் | அஷ்டம சனி | மிகவும் கவனம் தேவை | 20% | 80% |
| சிம்மம் | கண்டக சனி | கவனம் தேவை | 30% | 70% |
| கன்னி | ரோகசனி | பாதிப்பு குறைவு | 85% | 15% |
| துலாம் | பஞ்சம சனி | அர்நாஷ்டம சனி முடிவு | 75% | 25% |
| விருச்சிகம் | அர்தாஷ்டம் சனி | அர்நாஷ்டம சனி ஆரம்பம் | 40% | 60% |
| தனுசு | சகாய சனி | ஏழரை சனி முடிவு | 90% | 10% |
| மகரம் | பாதசனி | ஏழலை சனி கடைசி பகுதி | 30% | 70% |
| கும்பம் | ஜென்மசனி | ஏழரை சனி மத்திய பகுதி | 25% | 75% |
| மீனம் | விரைய சனி | ஏழரைச் சனி ஆரம்பம் | 30% | 70% |



மகர ராசி அவிட்டம் 2ஆம் பாதத்திலிருந்து, கும்ப ராசியில் உள்ள அவிட்டம் 3ம் பாதத்துக்கு பெயர்ச்சி ஆக உள்ள சனி பகவான், ரிஷப ராசிக்கு 10 இல் அமர்ந்து, உங்களுக்கு பல்வேறு வகையில் வளர்ச்சியும், நல்ல பெயரையும் பெற்றுத் தருவார். உங்கள் ஜாதகத்தில் சனி தசா, சனி புத்தி, சனி வலுப்பெற்று இருப்பின் உங்களுக்கு மேலும் சிறப்பான பலன்கள் கிடைக்கும்.

சனி பகவான் இதுவரை ரிஷப ராசிக்கு 9ம் இடத்தில் அமர்ந்து ஓரளவு நற்பலனைத் தந்த நிலையில், தற்போது, கர்ம காரகனான சனி, ராசிக்கு 10ஆம் இடம் எனும் கர்ம, தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்க உள்ளார்.

கர்ம காரகன், கர்ம ஸ்தானத்தில் அமர்ந்திருப்பதோடு, அவர் விரய ஸ்தானத்தைப் பார்ப்பதால் சுப விரயங்கள் ஏற்படும். அதாவது உங்களின் தொழில், வியாபாரம் தொடர்பாக உங்களின் செலவுகள் இருக்கும். தொழில் விரிவுபடுத்துதல் போன்ற விஷயங்களுக்காக உங்களின் செலவுகள் இருக்கும். விரைவில் அதன் மூலம் உங்களுக்கு லாபம் சிறப்பாக கிடைக்கும்.

சனி பகவான் தன்னுடைய 7ஆம் பார்வையால், உங்கள் ராசிக்கு 4ஆம் வீடான தாயார், சுக ஸ்தானத்தைப் பார்வையிடுகிறார். இதன் காரனமாக உங்களின் சுகம், ஆடம்பரம் அதிகரிப்பதற்கான பலன் கிடைக்கும். உங்கள் தொழில், வியாபாரம் தொடர்பான பெரியளவிலான பிரச்சினைகள் நீங்கி நிம்மதி கிடைக்கும். பணிச் சுமை அதிகமாக இருக்கும். உங்களின் வாய்ப்புகள், வசதிகள் அதிகரிப்பதோடு, உங்களின் மதிப்பு, மரியாதையும் அதிகரிக்கும். நீங்கள் இப்போது சம்பாதிக்கும் பணத்தை விட பல மடங்கு அதிகரிக்க தான் அதிக வாய்ப்புள்ளது. எந்த வகையான வியாபாரம், தொழில் செய்பவராக இருந்தாலும் அதில் மிக சிறப்பான முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். ஆவணி மாதம் பிற்பகுதி முதல் மார்கழி வரையிலும் உள்ள காலம் உங்களுக்குச் சாதகமாக இருக்கும்.

**பெண்களுக்கு:** நல்ல யோகத்தைக் கொடுக்கப் போகிறார் சனி. குடும்ப ஒற்றுமை ஓங்கும். கணவன் மனைவி உறவு சிறப்பாக அமையும். ஆரோக்கியம் மேம்படும். பிறந்த வீட்டால் ஏற்பட்ட சொத்துப் பிரச்சினை தீரும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்குச் சற்று வேலைப் பளு அதிகரிக்கும்.

**மாணவர்களுக்கு:** படிப்பில் சற்றுக் கவனக்குறைவு ஏற்படலாம். மறதி, மன சஞ்சலங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**உத்தியோகத்தர்களுக்கு:** தனியார் பணிகளில் இருப்பவர்கள், பணி மாற்றங்களை எதிர்பார்க்கலாம். உயர் பதவி மற்றும் வெளிநாடு செல்லும் யோகம் கைகூடும். நீண்டநாள் எண்ணங்கள் நிறைவேறும்.

**வியாபாரிகளுக்கு:** முதலீடுகளில் கவனம் தேவை கூட்டுத்தொழில் முயற்சிகளையும் கவனமாகக் கையாளுங்கள். நிதானமான செயற்பாடுகள் வெற்றி தரும்.

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும். தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. தொடங்கும் காரியம் இழுபறியானாலும் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். எதிரிகளின் தொல்லைகள் குறையும்.

**கடகம்:** முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் அவ்வப்போது தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பொறுமை அவசியம். செலவுகளால் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியம் அனுகூலமாக முடிவதுடன் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** தேவையான பணம் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். பிடிவாதப் போக்கு மாறும். ஆதாயங்களுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்து விடும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும். ஊக்கத்துடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பொறுமை மிக அவசியம்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற வீண்செலவுகள் சஞ்சலப்படுத்தும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆதாயம் உண்டாகும்.

# கடலாமை இறைச்சியை வைத்திருந்தவர் கைது



யாழ்ப்பாணம், ஜன. 12

சட்டவிரோதமான முறையில் கடலாமை இறைச்சியை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் ஊர்காவற்றுறையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று புதன்கிழமை இந்த கைது இடம்பெற்றது. அதேபகுதியைச் சேர்ந்த 52வயதுடைய சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)

## விபத்தில்...

இந்த விபத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் நடந்துள்ளது. தனது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சைக்கிளில் இவர் சென்றபோது, மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நடந்துள்ளது.

திருநெல்வேலியில் உள்ள மக்கள் வங்கிக்குச் செல்வதற்காக வீதியின் இடது புறத்தில் இருந்து வீதியின் நடுக்கோட்டை கடந்து மறுபுறத்துக்குச் சென்றபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் இவரை மோதி விட்டுத் தப்பிச் சென்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் மயக்கமடைந்த இவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அன்றையதினம் மாலை அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ- எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

"தவறு செய்தவர்களை மன்னித்து விடு ஆனால், அவர்களைத் திரும்ப நம்பும் அளவுக்கு முட்டாளாக இராதே" —புத்தர்

## கனடா எனும் நீதிதேவதை!

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோருக்கும் இராணுவப் பின்புலம் கொண்ட சுனில் ரத்னாயக்க மற்றும் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோருக்கும் பொருளாதாரத் தடைகளை விதித்து உத்தரவிட்டுள்ளது கனேடிய அரசாங்கம். 2009ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னராகவும் இடம்பெற்றது என்று கனடாவால் உறுதியாக நம்பப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்காகவே இந்தப் பொருளாதாரத் தடைகளை நிறைவேற்றியிருக்கின்றது கனடா. இந்தத் தடைகளுக்கு அமைய மேற்படி நால்வரும் கனடாவில் சொத்துக்களை வைத்திருந்தால் அது முடக்கப்பட்டு அரசுடமையாக்கப்படும் என்பதுடன் இனிவரும் காலங்களில் இவர்கள் கனடாவில் சொத்துக்களை புதிதாகக் கொள்வனவு செய்யவும் முடியாது. இவர்களுடன் கனேடியர்கள் பொருளாதார மற்றும் அதுசார்ந்த தொடர்புகளைப் பேணவும் முடியாது என்றும் இறுக்கமாக அறிவுறுத்தப்பட்டிருகின்றது.

இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னதாகவும் இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றன என்று தமிழர்கள் நீண்டகாலமாகவே தீர்க்கமாக வலியுறுத்தி வருகின்றனர். எனினும் இதற்கான நீதி இன்னமும் வழங்கப்பட்டாகவில்லை. குறைந்தபட்சம் இந்தப் போர்க்குற்றங்களுக்கான பரிகாரத்தை – நீதியை கண்டடைவதற்கான பொறிமுறைகள்கூட உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஏற்படுத்தப்படவில்லை. தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு – போர்க்குற்றங்களுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை காத்திரமான நடவடிக்கையொன்றை எடுத்து நீதியை வழங்கும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற போதிலும் அந்தக் காத்திருப்பானது 'இலவு காத்த கிளியாகவே' மாறிக்கொண்டிருக்கின்றது. இலங்கை அரசாங்கத்துக்கு மாறிமாறி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலஅவகாசங்கள், போர் தின்றுகொன்ற தமிழினத்தை மேலும் வதைத்தெறிகின்ற நிலையில், கனேடிய அரசாங்கத்தின் இந்த அதிரடி நடவடிக்கையானது தமிழர்களைப் பொறுத்தவரையில் உண்மையில் ஒரு வரப்பிரசாதமே. ஆதலால், இதுவிடயத்தில் கனேடிய அரசாங்கத்தை எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும்.

இதேவேளை கனேடிய அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது இதுவொன்றும் முதன்முறையல்ல. 'இலங்கையில் இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னதாகவும் போர்க்குற்றங்கள் இடம்பெற்றன. இலங்கை அரசாங்கம் அத்தகைய போர்க்குற்றங்களில் ஈடுபட்டது' என்று நாடாளுமன்றமொன்றில் தீர்மானம் நிறைவேற்றிய உலகின் முதல் நாடாகவும் ஒரேநாடாகவும் கனடாதான் இருக்கின்றது. இந்த அறிவிப்பை அடுத்து அதை நீர்த்துப்போகச் செய்வதில் ராஜதந்திர ரீதியாக இலங்கை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. எனினும் அதற்கெல்லாம் இம்மியும் வளைந்து கொடுக்காமல்தான் தற்போது அதைவிடப் பெரியதொரு அறிவிப்பை – தீர்மானத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றது கனடா.

இறுதிப்போர் முடிவடைந்து ஒரு தசாப்தத்துக்கு மேலாகின்றது. இதுவரை தமிழினம் எத்தனையோ முறையீடல்களை – கவனவீர்ப்புக்களை – நீதிக்கான கோரிக்கைகளை உலக நாடுகளிடமும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற 'உலக அரசாங்கங்களிடமும்' மாறிமாறி விடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மட்டும் ஒன்றல்ல இரண்டல்ல சுமார் 20 தடவைகள் தமிழினம் ஏமாற்றப்பட்டிருக்கின்றது. தமிழினம் பறிகொடுத்த உயிர்ப்பலிகள் மென்போக்குத்தன்மையுடனேயே அணுகப்பட்டிருக்கின்றன. ஆனால், உண்மையில் ஏற்படவேண்டிய மாற்றத்துக்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெடுப்புக்களுக்கும் கனடா இன்று கட்டியம் செய்திருக்கின்றது. இந்தக் காத்திரமானதும் முதுகெலும்புத்தனம் மிக்கதுமான நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டு அவை செயலுருப் பெறுகின்றபோதுதான் இலங்கை போன்ற அரசாங்கங்களுக்கு எதிரான நீதியென்பது, கேந்திர முக்கியத்துவம் பிராந்திய நலன் என்பவற்றைத் தாண்டி கைக்கெட்டும்.




# ஊதியம் தொடர்பில் அச்சம் கொள்ளாதீர்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 12

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அல்லது நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்பில் தேவையற்ற அச்சம் வேண்டாம் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வருமானம், அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், நலத்திட்ட உதவிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சில திட்டங்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்துவதற்கான திட்டம் தொடர்பில் தற்போது சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

# கோத்தா, மஹிந்தவுக்குத் தடை இலங்கை அரசாங்கம் அதிருப்தி

## கனேடியத் தூதுவரை அழைத்து நேரில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 12

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக கனடா அரசாங்கம் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள நிலையில், கனேடியத் தூதுவர் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டுமுதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச மற்றும் கோத்தாபய ராஜபக்ச, இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க மற்றும் லெப்டினன்ட் கமாண்டர் சந்தன ஹெட்டியாரச்சி ஆகியோருக்கு கனடா அரசாங்கம் நேற்று முன்தினம் பொருளாதாரத் தடைகளை விதித்தது. இதையடுத்தே கனேடிய தூதுவர் நேற்றையதினம் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு, அவரிடம் தனது அதிருப்தியை அரசாங்கம் தெரிவித்தது. (ம)

**நாளை**

13.01.2023
வெள்ளிக்கிழமை
மார்கழி 29

சுபநேரம் : 06.33 – 08.03
ராகுகாலம் : 11.03 – 12.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்மா பைக்கற்றுகள் விநியோகத்தில் பாரபட்சம்

வவுனியா, ஜன. 12

வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட மரக்காரம்பளை கிராம அலுவலர் பிரிவில் பால்மா விநியோகத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்ததாவது:-

கிராம அலுவலரால் பால்மா பைக்கற்றுகள் அண்மையில் வழங்கப்பட்டன. இவை பக்கச்சார்பான முறையிலும் தகுதியற்றோருக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரம் நலிவடைந்த குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு வழங்காது பால் மாடுகள் வைத்திருக்கும் வசதிபடைத்தோருக்கு பால்மா பைக்கற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் கிராமஅலுவலர் பொறுப்பற்ற முறையில் பதிலளிக்கிறார் எனத் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பிரதேச செயலாளரிடம் கேட்டபோது, வவுனியா பிரதேச செயலக பிரிவில் 36ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. இதில் 6 ஆயிரம் குடும்பங்கள் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. எமக்கு ஆயிரத்து 730 குடும்பங்களுக்கு வழங்குவதற்கான பால்மா பொதிகளே கிடைத்தன. அவற்றை பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கு விநியோகிக்கவே கிராம அலுவலருக்கு அனுமதி வழங்கியுள்ளோம். விநியோகிக்கப்பட்ட பால்மா பைக்கற்றுகள் தகுதியானவர்களுக்கு கிடைக்காதுவிடின் அவர்கள் என்னிடம் முறைப்பாடளித்தால் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம் எனத் தெரிவித்தார். (ச-110)

## பிரமாண்டமாக அரங்கேறவுள்ள காத்தவராயன் சிந்து நடை கூத்து

மன்னார், ஜன. 12

சித்திரைப் புத்தாண்டை சிறப்பிக்கும் முகமாக, மன்னார் மாந்தை மேற்கு கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் மாந்தை மேற்கு பகுதியில் வசிக்கும் கலைஞர்கள் பங்குபெற்றும் தமிழர்களின் பிரசித்தி பெற்ற பாரம்பரிய கலையான காத்தவராயன் சிந்துநடைக் கூத்து பிரமாண்டமான முறையில் அரங்கேற்றம் செய்யப்படவுள்ளது. எதிர்வரும் சித்திரை மாதம் 10 மற்றும் 11ஆம் திகதி மாந்தை மேற்கு பிரதேசசபை விளையாட்டு மைதானத்தில் அரங்கேற்றம் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ய-213)

## 2 ஆண்டுகளின் பின்னர் திருமறைக் கலாமன்றத்தால் பொங்கல் விழா ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 12

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா இரண்டு ஆண்டுகளின் பின் இம்முறை விமரிசையாக இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொங்கலன்று அதிகாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் விழா இடம்பெறும். தொடர்ந்து காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடு இடம்பெறவுள்ளது.

கலைநிகழ்வுகள் மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள திருமறைக் கலாமன்ற திறந்தவெளி அரங்கில் நிகழ்த்தப்படவுள்ளன.

நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனம், திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர்கள் வழங்கும் பொங்கல் பாடல்கள், திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'குசேலர்' இசைநாடகம், 'தவறாது வரும் தைகளும், தவறாகிப் போகும் தலைமுறையும்' எனும் தலைப்பில் சிறப்புக் கவியரங்கம் ஆகியவை நிகழ்வை சிறப்பிக்கவுள்ளன. (ச-இ)

## "பயங்கரவாதி" நாவல் வெளியீடு

கிளிநொச்சி, ஜன. 12

ஈழத்துக் கவிஞரும், எழுத்தாளருமான தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.ரகுராம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொள்ளவுள்ளார்.

கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் வரவேற்புரையையும் வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வாழ்த்துரையையும், பண்பாட்டு பேரவை தலைவர் அ.சத்தியானந்தன் வெளியீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (ச-13)

## கடலட்டைப்பண்ணைப் போராட்டத்தில் அமைச்சர் எம்மைப் புறந்தள்ளிவிட்டார்

### அரும்பு பெண்கள் அமைப்பின் கிளி.மாவட்டத் தலைவி கவலை

யாழ்ப்பாணம், ஜன. 12

கிராஞ்சியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணைகளை அகற்றுங்கள் என 100 நாள்கள் போராட்டம் நடத்தியும் கடற்றொழில் அமைச்சர் தம்மை புறம் தள்ளிவிட்டார் என்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அரும்பு பெண்கள் அமைப்பின் கிளிநொச்சி மாவட்டத் தலைவி நிறஞ்சன் பரிமளா கவலை தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**" கிராஞ்சியில் பத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் அட்டைப் பண்ணையால் தமது வாழ்வாதாரம் பறிபோன நிலையில் தொடர் போராட்டம் நடத்தி வரும் எங்களுக்கு இனியாவது அமைச்சர் சரியான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். "**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராஞ்சி இலவன்குடா பகுதியில் பல காலமாக பெண்கள் இறால், மட்டி நண்டு மற்றும் அட்டைகளை இயற்கையாகவே பிடித்து விற்பனை செய்து வந்தனர். ஆனால் தற்போது அப்பகுதிகளில் சிறு மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் முகமாக அட்டைப் பண்ணைகளை அமைத்துள்ளனர்.

சட்டவிரோத அட்டைப்பண்ணைகளை அகற்றுமாறு கோரி ஆளுநர் செயலகம் முன் அண்மையில் போராட்டம் நடத்திய பின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்குச் சென்று மனுவொன்றையும் கையளித்தோம்.

கடிதம் வழங்கியும் அமைச்சர் எமது கோரிக்கை தொடர்பில் எங்களுடன் பேசவில்லை. மாறாக இன்னொரு கடிதத்தைத் தாருங்கள் பார்க்கிறேன் என கூறிச் சென்றார். நாங்கள் அமைச்சரை நம்பி இருந்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. கிராஞ்சியில் பத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் அட்டைப் பண்ணையால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வாழ்வாதாரம் பறிபோன நிலையிலும் தொடர் போராட்டம் நடத்தி வரும் எங்களுக்கு இனியாவது அமைச்சர் சரியான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்றார். (ஒ-14-27)



## கடை உடைத்து பணம் திருட்டு!

கிளிநொச்சி, ஜன. 12

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியிலுள்ள கடையொன்று உடைக்கப்பட்டு பெருந்தொகை பணம் உள்ளிட்டவை களவாடப்பட்டுள்ளன என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மின்சாரம் துண்டிக்கப்பட்ட வேளையில் இடம்பெற்றுள்ளது.

வீட்டுடன் அமைந்துள்ள குறித்த கடையின் உரிமையாளர் நிகழ்வுக்குச் சென்று திரும்பிவந்து பார்த்தபோது கடை உடைக்கப்பட்டு 3 லட்சத்துக்கு 45 ஆயிரம் ரூபா பணம், வாழ்வாதாரத்துக்கு வளர்க்கப்பட்ட கோழி மற்றும் ஆடு ஆகியவை திருடப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

அதனையடுத்து உரிமையாளர் தருமபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்தார். திருட்டுச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.12

கோப்பாய் ஆசிரியர்களாக சாலையில் புதிதாகக் கற்கையை ஆரம்பித்துள்ள ஆசிரிய மாணவர்களுக்கான வரவேற்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கமும் அவரது பாரியார் வவுனியா தாதிய பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஜோதிமலர் கருணலிங்கமும் பிரதம விருந்தினராக கலந்து கொள்வர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

(எ)


## பெயர்மாற்றம்

அடைப்பு. அல்வாய் தெற்கு. அல்வாயில் வசிக்கும் **குகேந்திரன் குசேலன்** ஆகிய நான் எனது மகனின் பெயரினை இன்றுமுதல் **குகேந்திரன் ஷாம்** என மாற்றிக் கொள்வ-தோடு இன்றுமுதல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பம் இடுவார் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(ANE21548)4.6) **கு.சசிதா**



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 22.03.1943 — ஆண்டவன் அடியில் 13.12.2022

**அமரர் திருமதி புவனேஸ்வரி ஆறுமுகநாதன்**

(ஓய்வுநிலை அதிபர், கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்)

எங்கள் அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் எங்கள் அன்புத் தெய்வமே!
இவ்வுலகை விட்டு பிரிந்து சென்றதேனம்மா!

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி ஆறுமுகநாதன் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டு பலவழிகளிலும் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் நேரடியாகவும் தொலைபேசியிலும், மின்னஞ்சல் மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி மடல். இணையத்தளங்கள் மூலம் வெளியிட்டோருக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி தெரிவித்தோருக்கும் உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
கைதடி தெற்கு, கைதடி.

**குடும்பத்தினர்.**



## மரண அறிவித்தல்



**வேலன் தெய்வானைப்பிள்ளை (தெய்வானை)**

அனலைதீவினைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி மற்றும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலன் தெய்வானைப்பிள்ளை (தெய்வானை) நேற்றுமுன்தினம் (10.01.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மாதன் வேலனின் அன்பு மனைவியும், கந்தசாமி (இலங்கை மின்சாரசபை, யாழ்.நகர்ப்பகுதி), புஷ்பமணி, இராஜேஸ்வரி, சிவராஜா (வெற்றிலைக்கடை – சாவகச்சேரி சந்தை), பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரஸ்வதி, காலஞ்சென்ற கந்தையா, தவராஜா (மாகாணக் கல்வித்திணைக்களம், வடமாகாணம்), இன்பவதி, சுதாகரன் (சிற்றூழியர் - யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜன், கஜனீதரன், ஜீவிதா, தனுஷிகா, கிமில்டன், பிரவீன், டனுசியா, வாசுகி, சாரங்கன், டிசானா, டனிஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு. (CS 48575) 4-6)

தகவல்: **குடும்பத்தினர்.**

**077 869 4932, 077 623 3243**



## பணியாளர் வெற்றிடம்

A9 வீதி திருமுறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் உடனடியாக தேவைப் படுகின்றனர்.

- ✔ காசாளர்
- ✔ சிட்டை எழுதுனர்
- ✔ சமையலாளர்
- ✔ சமையல் உதவியாளர்
- ✔ உணவு பரிமாறுபவர்
- ✔ சுத்திகரிப்பாளர்

ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். உணவு மற்றும் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**077 386 6250**



## பெயர்மாற்றம்

மானிப்பாய் வீதி, உடுவிலில் வசிக்கும் **விஜேந்திரன் கிஸ்மிகா** ஆகிய நான் எனது பெயரை **விஜேந்திரன் யஸ்மிகா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **விஜேந்திரன் யஸ்மிகா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 48576) (4.6) **விஜேந்திரன் யஸ்மிகா**



## கேள்வி அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி**

**வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கான பெறுகைகள் – 2023/2024**

01. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, ,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

02. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.

03. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

    அ) விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    ஆ) அத்துடன், மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    இ) அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

06. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 12.01.2023 ம் திகதி முதல் 24.01.2023 ம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. 17.01.2023ம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைமுறைகள் தொடர்பான முன் கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.

08. கேள்விகள் யாவும் 25.01.2023ந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாக தலைவர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாக நிதிக்கிளை பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 25.01.2023 ந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.

09. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) ஒவ்வொரு பெறுகைக்கும் தனித் தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டாடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| இல | விபரங்கள் | குறியீட்டு இலக்கம் | பெறுகைப் பிணைத் தொகை | பெறுகைப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | பிரதேச வைத்தியசாலை பளை | NP/K/RDHS/CF/P/2023/8 | ரூபா.50,000.00 | 08.04.2023 | ரூபா.2000.00 |
| 02 | பிரதேச வைத்தியசாலை வேரவில். | NP/K/RDHS/CF/Ve/2023/7 | ரூபா.45,000.00 | 08.04.2023 | ரூபா.2000.00 |
| 03 | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | NP/K/RDHS/CF/Vad/2023/6 | ரூபா.30,000.00 | 08.04.2023 | ரூபா.2000.00 |
| 04 | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம். | NP/K/RDHS/CF/Ur/2023/5 | ரூபா.38,000.00 | 08.04.2023 | ரூபா.2000.00 |
| 05 | பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | NP/K/RDHS/DF/Tha/2023/4 | ரூபா.217,000.00 | 08.04.2023 | ரூபா.2500.00 |
| 06 | பிரதேச வைத்தியசாலை பூநகரி. | NP/K/RDHS/DF/Poo/2023/3 | ரூபா.160,000.00 | 08.04.2023 | ரூபா.2500.00 |
| 07 | பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம் | NP/K/RDHS/DF/Akk/2023/2 | ரூபா.200,000.00 | 08.04.2023 | ரூபா.2500.00 |
| 08 | ஆதார வைத்தியசாலை முழங்காவில் | NP/K/RDHS/DF/Mul/2023/1 | ரூபா.200,000.00 | 08.04.2023 | ரூபா.2500.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**
**TP- 0212285719, Fax- 0212285931**
**E-mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 12 . 1996



மறைவு 10 . 01 . 2023

### திருமதி ரஜீவன் பிரியவதனா

ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும், விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஜீவன் பிரியவதனா கடந்த (10.01.2023) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் மகிந்தன் சந்திரகலா தம்பதியரின் பாசமிகு இளைய மகளும், கம்சவாகினி, நவநீதன் ஆசியோரின் அருமைச் சகோதரியும், ரஜீவனின் மனைவியும், பிரசாந்தின் மைத்துனியும், தனீஸ்சின் சித்தியும், கணேசலிங்கம், கணேசராசா, கணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மருமகளும், சந்திராதேவி, ஜெயந்தன், சயந்தன், முகுந்தன் ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சரஸ்வதி, செல்வராஜா- யோகேஸ்வரி ஆகியோரின் செல்லப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2023) வியாழக்கிழமை விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல்: குடும்பத்தினர்.**

076 0732 609, 077 3461 976

(CS 22775) 1/6

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 09 - 1937



மறைவு 10 - 01 - 2023

### திரு. ஆறுமுகம் கந்தசாமி

யாழ். நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வேப்பங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தசாமி அவர்கள் 10.01.2023 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் இளைய புதல்வரும் காலஞ்சென்றவர்களான கனகசபை பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் சற்குணத்தின் அன்புக் கணவரும் ஆனந்தி (கொழும்பு) ஜெயானந்தன் (அமெரிக்கா) நித்தியானந்தன் (ஆசிரியர், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற விஜயகுமாரன் மற்றும் ராதிகா (அமெரிக்கா) தயாநிதி (ஆசிரியர் யா / கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, செல்லம்மா, செல்வரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், கனகசபை, கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஜிகார்த்தன், (அமெரிக்கா) ஜனார்த்தன் (கொழும்பு) பீஸ்மன், அபிநயா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 13.01.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேப்பங்குளம்,**
**வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்**
**ஆனந்தி : 0771311489**
**நித்தியானந்தன்: 0778849587**

(CS 1972) (3/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 11 . 1954



இறப்பு 10 . 01 . 2023

### திருமதி புஸ்பராணி சிறிஸ்கந்தராஜா

யாழ். சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி சிறிஸ்கந்தராஜா நேற்றுமுன்தினம் (10.01.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பூமணி தம்பதிகளின் அன்பு மருமகளும், சிறிஸ்கந்தராஜாவின் அன்பு மனைவியும், வேணுஜா (ஆசிரியை, கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலயம்) வின் பாசமிகு தாயாரும், கரிகாலனின் (பொறியியலாளர்) அன்பு மாமியாரும், காலஞ்சென்ற செல்வராணி, மகாலிங்கம், சிங்கராசா, யோகராணி, சிறிதரன் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், செல்லத்தம்பி, பரமசிவம், ஜெயபதி மற்றும் சரஸ்வதி, ராஜகோபால், நவீந்திரன் (பிரான்ஸ்), கெங்காதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சண்டிலிப்பாய் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.62,**
**சண்டிலிப்பாய் மத்தி,**
**சண்டிலிப்பாய்.**

**தகவல் :**
**சிறிஸ்கந்தராஜா (கணவர்)**
**077 [illegible]**

(CS/48577)4,6)

## மரண அறிவித்தல்

மலர்வு 28 . 09 . 1942



கர்த்தருக்குள் நித்திரை 10 . 01 . 2023

### திருமதி ஞானசிரோன்மணி இராசரத்தினம்

குடத்தனை வடக்கு, குடத்தனையை பிறப்பிடமாகவும் 40/4, விதானையார் வீதி, சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானசிரோன்மணி இராசரத்தினம் (கடை அக்கா) அவர்கள் கடந்த (10.01.2023) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆண்டித்தம்பி (முன்னாள் கிராமசங்க தலைவரும், வர்த்தகரும்) வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு, செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், திரு. சின்னப்பு இராசரத்தினம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், டேவிட் ஞானரத்தினம் (பவன்-சுவிஸ்), ஜொயிஸ் ஞானவதனி, டெய்சி ஞானதயாளினி (நிர்வாக உத்தியோகத்தர் மாகாண இறைவரி திணைக்களம், கைதடி) ஆகியோரின் அன்புத் தாயாரும், றொகான், வினோதினி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான நமச்சிவாயம், ஞானபூபதி மற்றும் ஞானமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லத்தங்கம் மற்றும் வல்லிபுரம் ஆகியோரின் மைத்துனியும், ஜெறோம் (3ம் வருட மாணவன் சித்த மருத்துவ அலகு கைதடி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), றொஷானி (சுவிஸ்), ஸ்டெபானி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (13.01.2023) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, யாழ்ப்பாண மெதடிஸ்த சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P.No: 077 083 6618
077 399 6947

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 22775) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவிக்கு...

10 நாள்களாக அவர் தலைமறைவாக இருந்த நிலையில், நேற்றுக் கோப்பாய் பொலிஸார் அவரைக் கைது செய்தனர். வலைப்பாடு பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகநபர் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர். தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டது என்று நம்பப்படும் வாள் ஒன்றும் சந்தேகநபரின் வீட்டிலுள்ள கோழிக் கூண்டுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது. (அ-எ-26-27)

## உள்ளூராட்சித்...

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் நேற்று நடத்தப்பட்ட சந்திப்பிலேயே சமன் ஸ்ரீ ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தைப் பெற வேண்டாம் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரை தொடர்பாக பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹபுஹின்னவிடம் தேர்தல்கள் ஆணைக்குழு விளக்கம் கோரவுள்ளது. அரசமைப்பின்படி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு இத்தகைய பணிப்புரை விடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவைத் தவிர வேறு எவருக்கும் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று நடந்த சந்திப்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெற்றிகரமாக நடத்துவதற்கு, சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. வாக்குப்பதிவின் போது வன்முறையில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்தினார். (அ-எ-இ)


# 45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 04 . 12 . 1985

இறப்பு 30 . 11 . 2022



கடந்த 30.11.2022 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## மகாலிங்கம் மணிவண்ணன் (ஜெகன்)

குடமியன், வேவில் கொடிகாமம்

வாழ்கையில் நம்மகூட. எவ்வளவோபேர்
இருந்தாலும் ஏதோ ஒரு சூழ்நிலையில் அப்பா இல்லை
என்பதை நினைச்சா அழுகை வருகுதப்பா! - **மனைவி, பிள்ளைகள்.**

நினைவுகள் முழுவதும் நீயே நிறைந்திருப்பதால்
தொலைவாக இருந்தாலும் உன் மீதான அன்பின் ஆழம்
குறைந்திடாது எந்நாளும்! - **அம்மா, சகோதர, சகோதரிகள்**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (13.01.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால், அத்தருணம், தாங்களும் தங்கள் குடும்ப சகிதம், வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில்கலந்து கொள்வதோடு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்த, உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், பதாகைகள், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோர்க்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இன்று வரை எமக்கு பல வழிகளில் உதவிபுரிந்த நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**077 289 9058** (CS 48094) (3/6) **குடும்பத்தினர்**



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 02.12.2004

இறைவன் அடியில் 13.12.2022



## அமரர் செல்வன் சுரேந்திரன் காருஷன்



வண்ணமான வாழ்வில்
வசந்தமாய் வந்துதித்த
எங்கள் குடும்பத்தின் இளவலே!

செல்ல மகனாக இனிமை
நிறைந்த தங்க இரதமே!
தளிர் கொடியே!
தாங்காத சோகத்தில்
எங்களை ஆழ்த்தி
விரைந்தே காலன் வசப்பட்ட
மாயம் தான் என்னவோ?

சின்னஞ்சிறு வயதில்
சிங்காரமாய் சிரித்து
அமிர்தமாய் மழலை பேசி
ஆனந்தங்களைக் கொட்டி இழைத்த
எங்களின் தவமாய் பிறந்த தவப் புதல்வா
பிரிந்து மறைந்துதான் போனாயோ?

கட்டிளம் பருவத்தில்
கந்தர்வன் போல் வளர்ந்து
உயர்ந்தோங்கிய மன்னவனே
மரகதமே!
யார் கண் பட்டதென்று
மீளாத் துயில் கொண்டாயோ!

ஆறாத்துயரில் அழுதழுது அரற்றுகின்றோம்
ஆறுதல் அற்றுத் தவிக்கின்றோம்
எங்கள் குலக் கொழுந்தே
கொடுங் கூற்றுவன் வசமாகி
ஒரு திங்கள் கழிந்ததே

உன் ஆன்மா ஈடேற்றம்பெறும் வண்ணம் அனுதினமும் நீ வணங்கிய
ஞான வைரவர் நாகம்மாள், அழகொல்லைப் பிள்ளையாரை தொழுது பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி வேளாவினை, அளவெட்டி. குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்



## கைலாசபிள்ளை சீவரத்தினம்

(முன்னாள் ஆசிரியர், யா/ வேம்படி மகளிர் கல்லூரி,
யா/ மத்திய கல்லூரி)

வேலணை மேற்கு சிற்பனையை பிறப்பிடமாகவும் அரசடி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை சீவரத்தினம் (பஞ்சலிங்கம்) அவர்கள் நேற்று முன்தினம் (10.01.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை இரத்தினாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு பொன்னு தம்பதியரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவி (சட்டத்தரணி, முன்னாள் ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக்கணவரும், யோகேஸ்வரியின்(லீலா) அன்புச் சகோதரரும், முகுந்தன், வைகுந்தன், இந்திரா பிரியதர்சினி, சபரி பிரியதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்ஷாயினி, குகரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரதியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2023) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**32, அரசடி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர். 077 020 0330**

(CS 48581) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைப்...

வங்கியால் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவு மற்றும் எரிபொருளுக்குச் செலுத்துவதற்கான அந்நியச் செலாவணி இல்லாமல் போனதால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. இதனால் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன. இதனால் இலங்கையின் உற்பத்தி 2022 ஆம் ஆண்டு 9.2 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என மதிப்பிடப்படுகின்றது.

இலங்கையின் அதிகாரிகள் ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை உணவு, மருந்து, எரிபொருள் தட்டுப்பாடுகளை மக்கள் எதிர்நோக்குவது தொடர்பாக உலக வங்கி கவலை வெளியிட்டுள்ளது.

நெருக்கடி மற்றும் அதன் விளைவுகள் வறுமையை அதிகரித்துள்ளதுடன் கடந்த தசாப்த காலத்தில் பெறப்பட்ட பலாபலன்களை இல்லாமல் செய்துள்ளன எனவும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் 4.3 வீதத்தால் வீழ்ச்சியடையும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

தொடரும் அந்நியச் செலாவணிப் பிரச்சினைகள் உயர் பணவீக்கத்தின் தாக்கம் முக்கியமான வர்த்தக சகாக்களின் பொருளாதார வளர்ச்சி - வீழ்ச்சி காரணமாக 2023ஆம் ஆண்டுக்கு முன்னர் எதிர்வு கூறப்பட்டவற்றை மாற்ற வேண்டிய நிலை யேற்பட்டுள்ளது என உலக வங்கி தெரிவித்துள்ளது.

தென்னாசியா தொடர்பாக தெரிவித்துள்ள உலக வங்கி உக்ரைன் போரின் தாக்கங்களை இந்த பிராந்தியம் தொடந்தும் எதிர்கொள்ளும் என தெரிவித்துள்ளது. தென்னாசியப் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி 2023ஆம் ஆண்டு 5.3 வீதமாகக் காணப்படும் என உலக வங்கி தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## போதை...

காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-27)

## களனி...

மின்னுற்பத்தி ஆலைகளை செயற்படுத்துவதற்குத் தேவையான நெப்தா எரிபொருள் இல்லாதமையே இந்தத் தீர்மானத்துக்குக் காரணம் என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படுவதால், தேசிய மின்னுற்பத்தியில் 165 மெகாவோட் மின்சாரம் இழக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## பித்தளையில்...

இந்தச் சம்பவம் 2016 ஆம் ஆண்டு நடந்துள்ளது. சந்தேநபரிடம் ஐந்தரைப் பவுணில் தாலிக்கொடி செய்வதற்கு பணம் கொடுத்திருந்த நிலையில், தங்கத்துக்குப் பதிலாக அவர் பித்தளையில் தாலிக்கொடியைச் செய்து கொடுத்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்தநிலையில், சந்தேகநபர் தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார். காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், பொலிஸ் பரிசோதகர் நிதர்வன் தலைமையிலான குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் நகைகள் அடகு வைக்கப்பட்டமைக்கான சிட்டைகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-26)


## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 31.05.1945 | ஆண்டவன் அடியில் 11.01.2023

### இரத்தினம் பரராசசிங்கம்

யாழ்.கொக்குவில் மேற்கு கொக்குவில் வராகி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இரத்தினம் பரராசசிங்கம் நேற்று (11.01.2023) புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
076 0828 019 தகவல்: குடும்பத்தினர்.

## முதலாம்ஆண்டு நினைவு நாள்

மண்ணில் 04 . 11 . 1945



விண்ணில் 24 . 12 . 2021

### அமரர் நாகநாதி மகாலிங்கம்

(ஓய்வுநிலை இ.போ.ச.நடத்துனர்))

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றிக் குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய் பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே உங்கள் பிரிவுத்துயர்
எம் நெஞ்சைவிட்டகலவில்லை

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை. (CS/48578)4,6) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராமன் தர்மலிங்கம் (மகாலிங்கம்)

புகையிரத பகுதி ஓய்வூதியர்)

தோற்றம் : 26.06.1942 மறைவு : 10.01.2023



கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் என அழைக்கப்படும் இராமன் தர்மலிங்கம் (புகையிரத பகுதி ஓய்வூதியர்) அவர்கள் கடந்த (10.01.2023) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமன் சீதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லர் செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொற்கொடி, அம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதர்சன் (யாழ். பல்கலைக்கழக ஊழியர்) அமரர் தயாளன், கவிதா, தர்மினி ஆகி யோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, சுகிலன், செல்வகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜிலக்சன், நபிசன், சுலக்சன், சஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனாரும், குமாரசாமி, தவராசா, ஈஸ்வரி, சிவகுமார், அமராவதி, மாரிமுத்து, சறோஜினிதேவி, வனராசா ஆகியோரின் மைத்துனரும், சின்னராசாவின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22780)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 01 . 1949



மறைவு 11 . 01 . 2023

### திரு.பொன்னையா கந்தசாமி

(ஓய்வுபெற்ற சாவகச்சேரி நீதிமன்றத்தின் எழுதுவினைஞர்)

ஆத்தியடி வீதி, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற சாவகச்சேரி நீதிமன்றத்தின் எழுதுவினைஞர் திரு. பொன்னையா கந்தசாமி அவர்கள் நேற்று (11.01.2023) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னையா அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற திருமதி கந்தசாமி பேதுருப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், சுதாகரன், சுதர்சினி, உமாகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோன்மணி, நவரத்தினமலர், யோகராசா, கிருஷ்ணகுமாரி ஆகியோரின் சகோதரரும், குமுதினி, சத்தியசீலன், வாசுகி ஆகியோரின் மாமனாரும், அபிஷ்ணவி, அபர்ணன், அதிரன், அகரா, அகிரா, அப்ஷரா, ஆதவன், அனன்யா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்ற திரு.பொன்னம்பலம் மற்றும் செல்லையா, புவனேஸ்வரி, சரோஜாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாலாவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.
076 607 3578

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22775) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழரசுக்...

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளையின் செயலாளர் வீரபாகு விஜயகுமார் ஆகியோர் நேற்று மதியம் கட்டுப் பணத்தைச் செலுத்தினர். வவுனியா மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களில் 4 சபைகளுக்கு நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. (அ-எ-27-110)

### உள்ளூராட்சித்...

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை, விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி உட்பட 12 கட்சிகள் இதில் அங்கம் வகிக்கின்றன. இதன்போது புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் கட்சிகளின் தலைவர்கள் கைச்சாத்திட்டனர். இந்தக் கூட்டணிக்குத் தலைவர் கிடையாது. தலைமைத்துவ சபை ஊடாக கூட்டணி வழிநடத்தப்படும். கூட்டணியின் செயலாளராக திலங்க சுமதிபால நியமிக்கப்பட்டுள்ளார்.

"உள்ளாட்சித் தேர்தலில் இந்தக் கூட்டணி 90 சதவீத சபைகளைக் கைப்பற்றும்." என்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (அ-எ-44)

### அரசியல்...

அரசியல் கைதிகளை தோரணங்கள் ஆக்கக்கூடாது.

இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பின் தலைவர் அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்தார். அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பினருக்கும் இடையே தீர்வு தொடர்பாக பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அரசியல்கைதிகள் தொடர்பில் நல்ல செய்தி வெளிவரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் எந்த உத்தரவாதமும் வழங்கவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 14 ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதியான கனகரத்தினம் ஆதித்தன் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது மீளப் பெற்றுக்கொண்டுள்ளது. ஆனால், இதுவிடுதலை அல்ல. ஆதித்தனுக்கு எதிராக இன்னொரு வழக்குக்கு நாள் குறிப்பிட்டுள்ளது.

இறுதியாக அரசாங்கத் தரப்புடன் நடந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பழைய பல்லவியையே பாடிக் கொண்டிருக்கின்றார். உடனடியாகத் தீர்க்கவேண்டிய பிரச்சினைகள் தொடர்பான பட்டியலைத் தாருங்கள் என்று அவர்கள் கேட்டார்கள் என்றும், நாம் அதைத் தயாரித்துக் கொடுப்போம் என்றும் கூறியிருந்தார். தமிழ் மக்களின் கோரிக்கைகள் நீண்டகாலமாக அரசாங்கத் தரப்பினரிடம் முன்வைக்கப்படும் நிலையில், தற்போதுதான் முதற்தடவையாக பேசுவது போன்று பட்டியல் கேட்கின்றனர். அதை இவர்கள் தயாரித்துக் கொடுக்க இருக்கின்றனர். இது யாரை ஏமாற்றும் நாடகம்?

அரசியல் கைதிகள் ஐந்து பேரின் விடுதலை தொடர்பாகவும் பேசப்படுகின்றது. யார் அந்த ஐந்து பேர்? இவர்களைத் தெரிவு செய்யும் உரிமை யாருக்கு உள்ளது?. அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவித்த பின்னரே அரச தரப்புடன், தமிழ்த் தரப்பு பேச்சுக்குச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் அரசாங்கத்துக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்து அவர்களைக் கரைசேர்க்கும் தரகுச் செயலாகவே இதை நோக்க முடியும். அவ்வாறு செயற்பட்டால் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தக்க பாடம் புகட்டுவர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 3 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வசந்த முதலிகே விடுவிக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அவரது கைதுக்கு எதிராகத் தற்போது கோஷம் எழுப்புபவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்கள் ஆதரவுடனேயே கடந்த 44 ஆண்டுகளாக பயங்கரவாதச் சட்டம் நடைமுறையில் இருக்கின்றது. நீங்கள் தற்போது அனுபவிப்பதையே தமிழ் மக்கள் 44 ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இதைப் புரிந்து கொண்டு தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசிடம் வலியுறுத்துங்கள். அதுவே உங்கள் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும்.

பேச்சில் ஈடுபடும் தமிழ் தரப்புகளுக்கும், அரச தரப்பினருக்கும் நாம் வலியுறுத்துவது உங்கள் அரசியல் திருவிழாவுக்காக அரசியல் கைதிகளை தோரணங்கள் ஆக்காதீர்கள். அவர்களின் விடுதலையை உறுதி செய்யுங்கள் - என்றுள்ளது. (அ-எ-7)

### ஜனநாயகப்...

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பில் இருந்து விலகி தனியாகப் போட்டியிடுவது என்ற தீர்மானத்தைக் கட்சிகள் எடுத்துள்ள நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கியிருந்தன. அந்தக் கூட்டணியில் தமிழ் மக்கள் கூட்டணி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி என்பன ஏற்கனவே இணைந்திருக்கும் நிலையில், தற்போது ஜனநாயகப்போராளிகள் கட்சியும் அதில் இணைந்து கொண்டுள்ளது.

தமிழ் மக்களுக்காக ஆயுதப் போராட்டங்களை மேற்கொண்ட அனைத்துத் தரப்புகளும் இந்தக் கூட்டணியில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கூட்டணியில் உள்ள கட்சிகளின் தலைவர்கள் நாளை வெள்ளிக்கிழமை ஒன்றுகூடி அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவுள்ளனர். மறுநாள் சனிக்கிழமை ஊடக சந்திப்பின் மூலம் கூட்டணியின் சின்னம், பெயர் என்பன தொடர்பில் அறிவிக்கப்படும். இந்தக் கூட்டணி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும். கூட்டணியின் சின்னம் கட்சியியொன்றினுடையதாகவோ அல்லது புதியதாகவோ இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-5)


## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 01 . 1936

மறைவு 09 . 01 . 2023

### திருமதி கமலாம்பிகை கிருஸ்ணசாமி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை கிருஸ்ணசாமி கடந்த (09.01.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஸ்ணசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேந்திரராஜா, நல்லையா மற்றும் சிவகுருநாதன், பூலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கேஸ்வரி, காலஞ்சென்ற கமலாம்பிகை, தவமணி மற்றும் விஜயலட்சுமி, காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மோகனராஜன், மனோகரன், பிரகலதா, பிரபாகரன், நகுலேஸ்வரி, விக்கினேஸ்வரி, நகுலராஜா, கேதாரகௌரி , காமினி, நந்தராஜா, பாலமுருகன், சுதர்சன், சுபாஷினி, வினோதன், நவீனன், வினித்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2023) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முந்திரிகை தோட்டம்,
கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு. (CS/48580)4,6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 12 . 1938

மறைவு 10 . 01 . 2023

### அமரர் சுப்பிரமணியம் தில்லைநாதன்

(முன்னாள் உரிமையாளர், ஸ்ரீ முருகன் நகைமாடம், சுன்னாகம்)

உடையார் வளவு, புன்னாலைக்கட்டுவன் தெற்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தில்லைநாதன் அவர்கள் 10.01.2023 செவ்வாய்க்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பூதாத்தைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான நடராசா வள்ளிப்பிள்ளை (இளவாலை) தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பத்மராணி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அம்பலவாணர், ஐயாத்துரை, செல்லப்பா (ஆசிரியர்) மற்றும் சின்னப்பா (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வைத்திய கலாநிதி மதுரா (அவுஸ்ரேலியா), சஞ்ஜிதா (நன்னடத்தை உத்தியோகத்தர், உடுவில்) மற்றும் துஷிதா(ஆசிரியர், யா/வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாநிதி. கு.சுந்தரவடிவேல் (விரிவுரையாளர், அவுஸ்ரேலியா), க.சடகோபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாணம்), ஏ.பகீதரன் (ஆசிரியர், யா/யூனியன் கல்லூரி) ஆகியோரின் பிரியமிகு மாமனாரும், அபிநயா, ஆரணா, ஆர்வலன் மற்றும் ஆரதியின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2023) வெள்ளிக்கிழமை அன்று மு.ப 11:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளிற்காக பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொலைபேசி:021 223 0943

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22775) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கி வரும் Phone Shop ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

(தென்மராட்சி பகுதிக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 95 30 787

## வேலை வெற்றிடம் யாழ்.மாவட்டம் விற்பனைப் பிரதிநிதி (Sales Rep.)

உணவுப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் குறைந்த பட்சம் 5 வருட அனுபவம் மற்றும் ஓட்டுநர் உரிமம் தேவை. வயது 23 - 35.

email: info@ourfarmers.lk 076 287 8157

## உழவர் அரிசிக்கடை

உழவர் - ஆட்டக்காரி அரிசி

1Kg - Rs. 225.00/=

10kg Bag - Rs. 2250.00/=

25Kg Bag Rs.5600.00/=

50Kg Bag Rs. 11200.00/=

(cs/22759)

மருதனார்மடம் சந்தை

076 287 8655

## கடை வாடகைக்கு தேவை

நெல்லியடி (அல்லது பருத்தித்துறை வீதி வடமராட்சி)யில் சிறிய நிறுவனம் ஒன்றிற்கு முற்பணம் இல்லாமல் அலுவலக இடம் தேவை.

077 996 9661

# கடை விற்பனைக்கு

**இல.13, செம்மார் தெரு லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் அமைந்துள்ள 25 அடி நீளமும் 16 அடி அகலமும் உடைய கடை விற்பனைக்குண்டு.

விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:

காலை 9 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தொடர்பு:- ஜெயம்

077 986 5457

# மரண அறிவித்தல்

மலர்வு 22 . 04 . 1955



உதிர்வு 11 . 01 . 2023

## திருமதி சரோஜினிதேவி கற்பகநாதன்

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், இல.60, பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி கற்பகநாதன் நேற்று (11.01.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கற்பகநாதனின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, லோகநாதன், காலஞ்சென்ற சோதிநாதன் ஆகியோரின் சகோதரியும், சிவப்பிரியா, இராதிகா, சுதாகர், சுகந்தன், சயந்தன் (ஸ்ரீ மாதவன், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவானந்தன் (சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர், முல்லைத்தீவு), தவக்குமரன் (ஆசிரியர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), பிரசாந்தினி (மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதிக்கிளை) ஆகியோரின் மாமியாரும், ஹரிணி, ஜலக்ஷனா, பர்வதன், மகிதினி ஆகியோரின் பேர்த்தியாரும், பத்மநாதன், சரஸ்வதி, கணேசன், தவமணி, கோகிலாவதி, சிவமணி, காலஞ்சென்றவர்களான கருணாநிதி, சிவசோதி, பாக்கியவதி, பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் பிறவுண் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/48579)4,6)

**தகவல் : குடும்பத்தினர்.**

077 541 3177

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08.02.1986

மறைவு 24.12.2021

## தர்மகுலசிங்கம் சுரேஷ்

வானத்தில் இருந்தல்ல .....
பூமியில் இருந்து உதிர்ந்து விட்டது
ஒரு நட்சத்திரம்!
கண்களில் மட்டும் இருந்தல்ல....
இதயத்தில் இருந்தும் கசிகிறது குருதி!
ஆண்டொன்று நகர்ந்தாலும்
நகராமல் நிலைக்கின்றது ஆழ்மனதில்
உன் நினைவுகள்! ஆசை தீ!
தம்பியே உன் அழகு திருமுகம்
காணாமல், அல்லாடுகிறது
எம் அன்பு மனம்! அனுதினமும்!
பாசத்தின் முகவரியே! பண்புகளின் அதிபதியே!
நேசத்தின் கரம் காணாது தவிக்கின்றோம் நித்தமும்
ஆசை மாமாவே அன்புக்கு இலக்கணமே! - உன்
புன்னகைப் பூக்களை காணாது
கரைந்ததா ஒரு வருடம்
மீள ஒருக்காய் வாருமையா
வந்து எமை ஒருக்காய் பாருமையா
ஆறுதல் சொல்ல முடியாமல்
பிரார்த்திக்கின்றோம் உன் ஆத்ம சாந்திக்காய்.

(CS 48539) (3/6)

**குடும்பத்தினர்.**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.